ந.க.எண். 101 / 2013

தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம்,
ஆலங்குடி – 622 301.
புதுக்கோட்டை மாவட்டம்.
நாள் : 14.06.2013

## மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தேர்வு நிலை பேரூராட்சியில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வேலைகளை செய்து முடிக்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆலங்குடி தேர்வு நிலை பேரூராட்சியால் கோரப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பெற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| அ. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் தொகை செலுத்தி பெற்றுக்கொள்ள கடைசி நாளும், நேரமும் | – | 26.06.2013ம் தேதி புதன் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை |
| ஆ. ஒப்பந்தப்புள்ளி டேவணித்தொகை | – | அட்டவணையில் கண்டுள்ள தொகை (வங்கி வரைவாக) |
| இ. ஒப்பந்தப்புள்ளி போடுவதற்கான கடைசி நாளும், நேரமும் | – | 27.06.2013ம் தேதி வியாழக் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை |
| ஈ. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாளும் நேரமும் | – | 27.06.2013ம் தேதி வியாழக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு |

### நிபந்தனைகள்

**1.** ஒப்பந்தப்புள்ளிகள் ஆலங்குடி பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றுள்ளவர்களாலோ 27.06.2013ம் தேதி பிற்பகல் 3.00 மணிக்குள்ளும், பதிவஞ்சல் மூலம் குறிப்பிட்ட தேதிக்குள் கிடைக்குமாறும் அனுப்பலாம். அஞ்சலக காலதாமதத்திற்கு பேரூராட்சி பொறுப்பு ஏற்காது.

2. மேற்படி ஒப்பந்தப்புள்ளி போடுவதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவத்தை 26.06.2013ம் தேதி புதன் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் மேற்படி வேலைக்கும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி படிவக்கட்டணம் (விற்பனை வரி உள்பட) செலுத்தி படிவம் பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்படி ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் போடாத ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3. **ஒவ்வொரு ஒப்பந்தகாரரும் அட்டவணையில் குறிப்பிட்ட வேலைக்கு எதிரே குறிப்பிட்டுள்ள டேவணித் தொகையினை தேசியமயமாக்கப்பட்ட ஏதேனும் வங்கி ஒன்றில் Executive Officer, Town Panchayat, Alangudi** என்ற பெயரில் வங்கி வரைவினை ஒப்பந்தப்புள்ளியுடன் கண்டிப்பாக இணைத்து அனுப்ப வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படாத ஒப்பந்தகாரர்களின் டேவணித்தொகை மன்றத்தீர்மானத்திற்கு பிறகு திருப்பி அளிக்கப்படும். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரருடைய டேவணித் தொகையை வேலைகளுக்காக பிணை வைப்புத்தொகையாக வைத்துக்கொள்ளப்படும், இத்தொகைக்கு பேரூராட்சியால் வட்டி எதுவும் கொடுக்கப்படமாட்டாது .

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் / பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ந.க.பி1350/2012 நாள் 24.05.2013 நிர்வாக அனுமதியில் கண்டுள்ள கீழ்கண்ட நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. உரிய தொழில்நுட்ப அலுவலரால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட வேண்டும்.
2. வேலை மதிப்பீட்டுடன் பணித் துவங்குவதற்கு முன்னர் பெரிய அளவு புகைப்படம் (A4) எடுத்து புகைப்படத் தொகுப்பில்விபரங்களுட. தயார் செய்து வைக்க வேண்டும்.
3. வேலை நடைபெறும் இடத்தில் திட்டத்தின் பெயர், பணியின் பெயர், மதிப்பீடு தொகை, சட்டமன்ற உறுப்பினரின் பெயர், வேலை துவங்கும் நாள், ஒப்பந்தக்காரர் பெயர் ஆகிய விபரங்கள் அடங்கிய விளம்பர பலகை வேலை துவங்கும் போது வைக்கப்பட வேண்டும்.
4. பணிகள் துவங்கும் முன்பு எடுக்கப்பட்ட புகைப்படத் தொகுப்பினை பணி முடிந்த பின்னர் எடுக்கப்பட்ட புகைப்பட தொகுப்புடன் (A4அளவு) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
5. வேலைகள் எவ்வித புகார்களுக்கும் இடமின்றி உரிய காலத்தில் முடிக்கப்பட வேண்டும்.
6. வேலைகள் அரசு ஒப்பந்த விதிகளின்படி ஒப்பந்தகாரர்கள் மூலம் செய்யப்பட வேண்டும்.

7. பள்ளிகளுக்கு பெஞ்ச்/டெஸ்க் மற்றும் சோலார் விளக்குகள் அமைத்தல் முதலியவ.றை அரசு அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளிகள் ஆலங்குடி பேரூராட்சி செயல் அலுவலரால் ஆலங்குடி பேரூராட்சி அலுவலகத்தில் 27.06.2013ம் நாள் வியாழக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

5. 2013–14ம் ஆண்டிற்கு ஒப்பந்தக்காரர் பதிவினை புதுப்பித்த ஒப்பந்தக்காரர்களுடைய ஒப்பந்தப்புள்ளி மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். 2013–14ம் ஆண்டிற்கு புதுப்பிக்காத ஒப்பந்தக்காரர்களுடைய ஒப்பந்தபுள்ளி கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையின்மேல் ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் ஒப்பந்தக்காரர் பெயர், செயல் அலுவலரின் முகவரி எழுதப்பட்டு மற்றும் எந்த வேலை என்ற விவரத்தை தெளிவாக எழுதப்பட்டிருக்கவேண்டும். ஒரு வேலைக்கு ஒரு ஒப்பந்தப்புள்ளிதான் அனுப்பவேண்டும்.

7. மதிப்பீடு விலைக்கு கூடுதலாக வேலையை செய்வதாகக் குறிப்பிடும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

8. மதிப்பீடு விலைக்கு குறைவாக வேலையை செய்வதாக ஒப்புக்கொள்ளுகின்றவர்கள் 10% வரை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். 10% மேற்கொண்டு கூடுதலாக கோரும் சதவீதத் தொகையில் 5% தொகை கூடுதல் பிணை வைப்புத்தொகையாக செலுத்தினால்தான் அவர்களுடைய ஒப்பந்தப் புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதற்கும் பேரூராட்சியினால் வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது. கூடுதலாக பெறப்பட்ட பிணை வைப்புத் தொகை மட்டும் வேலைகள் முடிவுற்று, முடிவு அறிக்கை வந்தபின் திரும்ப வழங்கப்படும்.

9.ஒரு வேலைக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வந்தால் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10. டேவணித் தொகை செலுத்தப்படாத ஒப்பந்தப் புள்ளிகளும், உரிய படிவத்தில் போடாத ஒப்பந்தப் புள்ளிகளும் குறித்த நேரத்திற்கு பிறகு பெறப்படும் ஒப்பந்தப் புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.

11. அரசு ஒப்பந்தப்புள்ளி விதிகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்படும். குறைந்த விகித ஒப்பந்தப்புள்ளியைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேரூராட்சியைக் கட்டுப்படுத்த இயலாது. காரணங்கள் கூறாமல் ஒரு ஒப்பந்தப்புள்ளி அல்லது பெறப்பட்ட அனைத்து ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்கும் அதிகாரம் பேரூராட்சிக்கு உண்டு.

12. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவிப்பு கிடைத்த தேதியிலிருந்து 3 நாட்களுக்குள் குறிப்பிட்ட படிவத்தில் தவறாது சொந்தச் செலவில் ஒப்பந்தக்காரர் வேலைகளை முறையாக முடித்துத் தருவதாக ஒப்பந்தப் பத்திரம் பேரூராட்சிக்கு எழுதிக் கொடுக்க வேண்டும். அவ்வாறு ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுக்கத் தவறினாலோ அல்லது அதிகப்படியாக செலுத்தக் கோரிய டேவணித் தொகையை செலுத்தத் தவறினாலோ மறு ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டு ஒப்பந்தப்புள்ளி டேவணித்தொகை பறிமுதல் செய்யப்பட்டு, பேரூராட்சிக்கு ஆதாயம் செய்யப்படும்.

13. ஏற்றக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் செலுத்திய டேவணித்தொகை இது சம்மந்தப்பட்ட கணக்குகளின் தணிக்கை முடிந்தவுடன் திருப்பி அளிக்கப்படும். தணிக்கையாளரின் முடிவிற்கு ஒப்பந்தக்காரர் கட்டுப்பட வேண்டும். தணிக்கையில் ஆட்சேபிக்கப்பட்டுள்ள தொகையினை ஒப்பந்தக்காரர் பேரூராட்சிக்குச் செலுத்த வேண்டும்.

14. ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளியைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தக்காரருடைய டேவணித்தொகை பேரூராட்சிக்கு பறிமுதல் செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளியை திரும்பப் பெற்றுக்கொண்டதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் சம்மந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் பொறுப்பாவார்.

15. ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப் படிவத்தில் வேலைகள் மற்றும் சதவீகிதத்தினை தெளிவாக எழுதி இருக்க வேண்டும். அடித்தல், திருத்தல் இருக்கக் கூடாது. அவ்வாறிருப்பின் அடிக்கப்பட்ட இடங்களில்

ஒப்பந்தக்காரர் கையொப்பம் இட்டிருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள இலக்கங்கள் எண்ணாலும், எழுத்தாலும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

16. ஒப்பந்தக்காரர் ஒப்புக்கொள்ளப்பட்ட வேலைக்கு சப்ளை செய்யப்படும் – பொருட்கள் தரமானதாகவும், (standard specification) ஆய்வு செய்யும் அலுவலர்கள், பொறுப்பாளர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டும். தரமானதாக இல்லை என்று நிராகரிக்கப்பட்டால் அவ்வாறு நிராகரிக்கப்பட்ட பொருட்களை 24 மணி நேரத்தில் வேலை செய்யும் இடத்தில் இருந்து ஒப்பந்தக்காரர் தனது சொந்தப் பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும்.

17. இதில் குறிப்பிட்டுள்ள வேலைகளில் வேலை முடிவுற்று ஆறு மாத காலத்திற்குள் அதில் ஏதேனும் பழுதுகள் ஏற்பட்டால் அதனை ஒப்பந்தக்காரர் தனது சொந்தப் பொறுப்பில் சரி செய்து கொடுக்க வேண்டும். தவறினால் ஒப்பந்தக்காரர் செலுத்தியுள்ள பிணை வைப்புத் தொகையிலிருந்து பேரூராட்சியால் பழுது பார்க்கப்படும்.

18. ஒப்பந்தப் பத்திரம் எழுதி முடித்த தேதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள் வேலையை துவக்கி குறிப்பிட்ட கால அளவிற்குள் வேலையை முடிக்க வேண்டும். குறிப்பிட்ட கால அளவிற்குள் வேலை முடிக்கப்பட வில்லையானால் மதிப்பீட்டுத்தொகையில் 1/2% வீதம் வேலை முடிக்கப்படும் வரை குறிப்பிட்ட தேதியில் இருந்து தினசரி அபராதக் கட்டணம் வசூலிக்கப்படும். வேலையை குறித்த காலத்திற்குள் முடிக்கப்படவில்லையானால் அதனால் பேரூராட்சிக்கு ஏற்படும் நஷ்டத்தை வசூலிக்க நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். அபராதக் கட்டணம் விதிக்கப்பட்டதற்கு பிறகும் வேலையை முடிக்கவில்லையானால், பிணை வைப்புத் தொகையை பறிமுதல் செய்யவும் மறு ஒப்பந்தப் புள்ளிவிட்டு வேலையை முடிக்கவும் பேரூராட்சிக்கு அதிகாரம் உண்டு. இதனால் உண்டாகும் இழப்பீடுகளுக்கு ஒப்பந்தக்காரரே பொறுப்பாகும்.

19. பட்டியலில் விதிமுறைப்படி ரூ.10,000/–க்கு மேல் செய்யப்படும் வேலைகளுக்கு வருமான வரிப் பிடித்தம் மற்றும் விற்பனைவரி பிடித்தம் செய்யப்படும்.

20. ஏற்கனவே இப்பேரூராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் வேலைகள் எடுத்து குறிப்பிட்ட காலத்தில் பணி முடிக்காத ஒப்பந்தக்காரர்களுக்கு வேலைக்கான ஷெடியூல் வழங்கப்படமாட்டாது.

21. ஒப்பந்தக்காரரால் செய்யப்படும் வேலைகளும், சப்ளை செய்யப்படும் பொருட்களும் சம்மந்தப்பட்ட தொழில்நுட்ப அலுவலர்களால் அளவு மற்றும் மேலளவுகள் செய்யப்பட்டு பட்டியல்கள் தயார் செய்யப்பட்ட பின்பு, பட்டியல் திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்ற பின்னரே தொகை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படும்.

22. பினை வைப்புத் தொகையாக ஒப்பந்த நாளன்று 2 ½,% ரொக்கமாக செலுத்த வேண்டும். பணி முடித்து பட்டியலில் 2 ½,% பிடித்தம் செய்யப்படும்.

23. கட்டிட தொழிலாளர் நலநிதி 0.3% வேலை செய்த மதிப்பீடு ரேட்டில் பட்டியலிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

24. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மன்ற ஒப்புதலுக்கு பிறகு, பேரூராட்சியின் நிதி நிலைமையை அனுசரித்து பணி ஆணை வழங்கப்படும். இதில் செயல் அலுவலர் நிதி நிலைக்கேற்ப உசிதம்போல் செயல்பட அதிகாரம் உண்டு.

25. இந்த விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள மணி, நேரங்கள் அலுவலக கடிகார நேரப்படி செயல்படும்.

26. ஒப்பந்தக்காரர்கள் இப்பேரூராட்சியில் தொழில்வரி மற்றும் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய அனைத்து வரியினங்களையும் முறையாக செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு செலுத்தாத ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

27. மேற்கண்ட பணிகளுக்கான பட்டியல் தொகையை திருச்சி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் மேலொப்பம் பெற்ற பின்னரே வழங்கப்படும்.

...4...

**அட்டவணை**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி படிவக் கட்டணம் | பிணை வைப்பு தொகை ரூ. | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | **2013–14ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**<br><br>ஆலங்குடி பேரூராட்சி செட்டிக்குளம் ஊரணிக்கு நடுவில் பேபி பாண்ட் சுற்றுச்சுவர் அமைத்தல் | 13,20,000/– | 6126/– | முன் வைப்பு தொகை 2½% 33000/- | 30 நாட்கள் |

**செயல் அலுவலர்,**
**ஆலங்குடி பேரூராட்சி**

பெறுநர் அனைத்து பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் ஆலங்குடி பேரூராட்சி

நகல்– மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள், சிவகங்கை தொகுதி.

„ சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், ஆலங்குடி தொகுதி

„ தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆலங்குடி பேரூராட்சி

„ பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்கள், திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

„ திட்ட இயக்குநர் மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை புதுக்கோட்டை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

„ பேரூராட்சிகளின் உதவி பொறியாளர் புதுக்கோட்டை மாவட்டம்.